CNR.No.TNTI1F-000563-2025

**சார்பு நீதிமன்றம், காங்கயம், திருப்பூர் மாவட்டம்**

**முன்னிலை:** S.சந்தான கிருஷ்ணசாமி, பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி, காங்கயம்.

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் நாள் வியாழக்கிழமை

(2057 திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம் மாசித் திங்கள் 28 ம் நாள்)

**OS.No.156/2025**

கரூர் வைசியா வங்கி,
வெள்ளகோவில் கிளை,
அதற்காக அதன் கிளை மேலாளர் .... வாதி

/ எதிர் /

ஜோதிலட்சுமி ....பிரதிவாதி

இவ்வழக்கானது 11.03.2026 ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.C.ஈஸ்வரமூர்த்தி, அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.G.தமிழ்செல்வம், அவர்கள் ஆஜராகியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றாத் தரப்பினர் நிலையில் வைக்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்குக் கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாகப் பரிசீலனை செய்து, வாதி தரப்பு வாதங்களைக் கேட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

வாதி வங்கிக்கு, பிரதிவாதியிடமிருந்து வரவேண்டிய தாவா கடன் தொகை ரூ.4,61,831/-ஐ 12.50% வட்டியுடன் தாவா தாக்கல் செய்த நாள் முதல் தொகை வசூலாகும் வரை செலுத்துமாறும், செலவு தொகைக்காகவும் வாதி வங்கியால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**01. வழக்குரையின் சுருக்கம்:**

பிரதிவாதி வாதி வங்கியை அணுகி தனிநபர் கடன் வேண்டி கடந்த 03.05.2023 ம் தேதியில் விண்ணப்பித்தார். மேற்படி பிரதிவாதி அளித்த கடன் விண்ணப்பத்தினை பரிசீலித்து 26.05.2023 ம் தேதியில் ரூ.4,20,000/-

பிரதிவாதியின் தேவைக்காக கடனாக வழங்கி, ஒப்புதல் செய்து, ஒப்புதல் கடிதம் வாதி வங்கியால் அளிக்கப்பட்டது. மேற்படி கடன் தொகையை பிரதிவாதிக்கு, வங்கியின் வட்டி விகித மாறுதலுக்குட்பட்டு வருடத்திற்கு 12.50% வருட வட்டியுடன் 60 மாத தவணைகளில் கடன் தொகையினை முறையாக திருப்பி செலுத்த வேண்டும் என அனுமதி வழங்கி பிரதிவாதியின் வங்கி கணக்கு எண்.129591000000780 ல் வாதி வங்கியால் செலுத்தப்பட்டது.

1.2. பிரதிவாதி கடன் பெற வாதி வங்கிக்கு ஆதரவாக பல்வேறு ஆவணங்களை ஏற்படுத்தி கொடுத்துள்ளார். மேலும் பிரதிவாதி கடந்த 26.05.2023 ம் தேதி கடன் ஒப்பந்தம் ஒன்றை வாதி வங்கிக்கு ஆதரவாக எழுதிக் கொடுத்து கையொப்பம் செய்து கொடுத்து கடன் முழுவதும் திருப்பி செலுத்துவதாக ஒப்புக் கொண்டுள்ளார். அதேபோல் தவணைகளை சரிவர திருப்பி செலுத்துவேன் என்றும், தவணைகள் திருப்பி செலுத்தாவிட்டாலும் முழு கடனையும் வசூல் செய்யும் உரிமை வாதி வங்கிக்கு உண்டு என்றும், மேலும் கடன் தொகையினை திருப்பி செலுத்துவதற்காக வாதி வங்கிக்கு விதிக்கும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்கிறேன் என்று பிரதிவாதி உறுதியளித்துள்ளார். அதன் பிறகு பிரதிவாதி கடன் தொகையினை முறையாக திருப்பி செலுத்தாமல் வீண் காலம் தாழ்த்தி வந்துள்ளார். மேலும் எழுதிக் கொடுத்த கடன் பத்திரம் மூலம் பிரதிவாதி வாங்கிய கடனுக்கு ரிசர்வ் வங்கி விதிகளுக்கு ஏற்ப வட்டி விகிதத்தில் காலத்திற்கு ஏற்ப மாற்றம் செய்ய வாதி வங்கிக்கு உரிமை உண்டு.

1.3. மேற்படி கடன் தொகையினை திரும்ப செலுத்தக்கோரி பிரதிவாதியிடம் வாதி வங்கி பலமுறை கேட்டும் கடனை திருப்பி செலுத்தாமல் வீண் காலம் தாழ்த்தி வந்துள்ளார். இறுதியாக கடந்த 09.09.2024 ம் தேதி

பிரதிவாதிக்கு வாதி வங்கி சார்பாக கடன் நிலுவை தொகையை முழுமையாக செலுத்துமாறு கேட்டு அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பை பிரதிவாதி 10.09.2024 ம் தேதியன்று பெற்றுக்கொண்டு பின்னிட்டும் பதிலோ, அல்லது பணமோ கொடுக்காமல் வீண் காலம் தாழ்த்தி வந்துள்ளார்.

1.4. மேலும் வாதி வங்கியால் பராமரிக்கப்பட்டு வரும் கணக்கு அறிக்கையின் படி கடந்த 05.06.2025 ம் தேதி முடிய பிரதிவாதி வாதிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.4,61,831/-ஐ திருப்பி செலுத்தாமல் வீண் காலம் தாழ்த்தி வந்துள்ளார். வாதி வங்கிக்கு ஆதரவாக பிரதிவாதி எழுதிகொடுத்துள்ளதன் பேரில் பிரதிவாதி கடன் நிலுவை தொகையை திருப்பிச் செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவார். இவ்வழக்கு காலவரையரை சட்டத்துக்குள் வருகிறது. எனவே பணப் பரிகாரம் கோரி தொகை வசூலாகும் பொருட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**02.** தாவா தொடர்பாக பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் இவ்வழக்கில் தோன்றாத் தோன்றாதரப்பினர் நிலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

**03.** இந்நிலையில் வாதி வங்கிக்கு தாவா பரிகாரங்கள் கிடைக்கக் கூடியதா? இல்லையா? என்பது குறித்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து பார்த்து தீர்வு காண வேண்டியுள்ளது.

**04.** வாதி வங்கி தரப்பில் வங்கியின் கிளை மேலாளர் திரு.மோகன்ராஜ் என்பவர் வா.சா.1 ஆக வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார். வாதி தரப்பு வழக்கிற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ 5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

05) <u>பிரச்சனைக்குரிய தீர்வு :</u>

வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞரின் வாதத்தைக்

கேட்டு வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் இந்நீதிமன்றம் பரிசீலனை செய்துள்ளது. வழக்குரை சங்கதிகளுக்கு ஆதரவாக, வாதி வங்கியின் கிளை மேலாளர் திரு. மோகன்ராஜ் வா.சா.1ன் வாய்மொழி சாட்சியத்தின் மூலமாக 26.05.2023ம் தேதிய கடன் அனுமதி கடிதம் வா.சா.ஆ.1 ஆகவும், 26.05.2023ம் தேதிய கடன் ஒப்பந்தம் அசல் வாசாஆ.2 ஆகவும், 09.06.2024ம் தேதிய பிரதிவாதிக்கு வாதி வங்கி சார்பாக நிலுவை தொகையை செலுத்துமாறு கோரி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆகவும், அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.4 ஆகவும் கணக்கு பட்டியல் வா.சா.ஆ 5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5.2. வா.சா.ஆ.1, 2 ஆவணங்களை பரிசீலிக்கையில் பிரதிவாதி வாதி வங்கியில் தொழிற்கடன் பெற்றுள்ளார் என்பதும் அதற்கு ஆதரவாக வாதி வங்கிக்கு கடன் ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுத்துள்ளதும் தெரியவருகிறது. வா.சா.ஆ.3, 4 வழக்கறிஞர் அறிவிப்பைப் பரிசீலக்கையில் வாதி வங்கி பிரதிவாதியை நிலுவை தொகையை செலுத்துமாறு கோரியுள்ளார் என்பதும் பின்னிட்டு பிரதிவாதி இதுநாள்வரை பணமோ, பதிலோ தராமல் இருந்து வருகிறார் என்பதும் உறுதியாகிறது. வா.சா.ஆ.5ஐ பரிசீலிக்கையில் வாதி வங்கியில் பிரதிவாதியானவர் கடன் பெற்றுள்ளார் என்பது தெளிவாகிறது. பிரதிவாதியானவர் வா.சா.1ன் வாய்மொழி சாட்சியம் மற்றும் ஆவணச் சான்றுகளை மறுத்துரைத்தும் எதிர்வழக்காட முன்வரவில்லை.

தாவா சங்கதிகள் அனைத்தும், தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலமாக வாதி வங்கியால் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், வாதி வங்கிக்கு தாவா பரிகாரங்கள் அனைத்தும் கிடைக்கக்கூடியது என முடிவு செய்யப்பட்டு, தாவா பிரச்சனைக்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**முடிவில்,**

தாவா தொகை ரூ.4,61,831/-மும், மற்றும் அசல் தொகை ரூ.4,20,000/-க்கு தாவா தேதி முதல் நாளது தேதி வரை 9% வட்டி சேர்த்தும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை முழுவதும் செல்லாகும் வரை 6% வட்டி சேர்த்தும், வாதி வங்கிக்குப் பிரதிவாதி செலுத்த வேண்டுமென உத்தரவிட்டு செலவு தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்பு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

S SANTHANA KRISNASAMY
Digitally signed by S SANTHANA KRISNASAMY
Date: 2026.03.13 18:25:13 +0530

சார்பு நீதிபதி,
காங்கேயம்.

**வாதி தரப்பு சாட்சி :-**

வா.சா.1 -திரு. மோகன்ராஜ் (வங்கி முதுநிலை மேலாளர்)

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :-**

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் விபரம் | தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 26.05.2023 | கடன் அனுமதி கடிதம் | பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.2 | 26.05.2023 | கடன் ஒப்பந்தம் | பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.3 | 09.06.2024 | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.4 | -- | அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசல் |
| வா.சா.ஆ.5 | -- | கணக்கு பட்டியல் | கணினி நகல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்-** இல்லை

S SANTHANA KRISNASAMY
Digitally signed by S SANTHANA KRISNASAMY
Date: 2026.03.13 18:25:36 +0530

சார்பு நீதிபதி,
காங்கேயம்.